ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1877/79 - 2014 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2014.08.29

*1877/79 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பொல்தும்பே சமன் தேவாலயப் புனித பிரதேசத்தினை புனித பூமியாகப் பிரகடனப்படுத்தல்

*இலக்கம் 1681 கொண்ட 2010, நவெம்பர் மாதம் 22 ஆம் திகதி, திங்கட்கிழமை அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1681/3 ஆம் இலக்கம் கொண்ட 2010, நவம்பர் மாதம் 22 ஆம் திகதி, திங்கட்கிழமை வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி மூலமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் பௌத்த சாசன மற்றும் மதவிவகாரஅமைச்சர் கலாநிதி திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள புனித பூமி திட்டமிடல் மற்றும் அபிவிருத்தித் துறை விடயம் தொடர்பாக கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் நீண்டகால பாதுகாப்புக் கருதி அந்தப் பிரதேசத்தினை புனித பிரதேசமாகவும் அதனை "பொல்தும்பே சமன் தேவாலயப் புனித பூமி" என அறிமுகப்படுத்திக்கொள்ள முடியுமெனவும் பிரகடனப்படுத் தப்படுகின்றது.*

*கலாநிதி தி. மு. ஜயரத்ன,*
*பிரதமர், பௌத்த சாசன மற்றும் மதவிவகார அமைச்சர்.*

*பௌத்த சாசன மற்றும் மதவிவகார அமைச்சு,*
*இலக்கம் 135,அநகாரிக்க தர்மபால மாவத்தை,*
*கொழும்பு 07,*
*2014, ஓகத்து 20.*

**அட்டவணை**

*பொல்தும்பே சமன் தேவாலயப் புனித பூமி உள்ளடக்கும் பிரதேசம்*

*நில அளவையாளர் நாயகத்தின் 2010 மார்ச்மாதம் 12 ஆம் திகதிய இலக்கம் R/IMB/2010/159 கொண்ட ஆரம்ப வரைபடத்தில் துண்டு இலக்கம் 22 எனக் குறிப்பிடப்பட்டுள்ள சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி நிருவாகமாவட்டத்தில், இம்புல்பே பிரதேச செயலகப்பிரிவில், கடவத்தை கோரளையின் உடுவக்கம் பத்துவ சிறுபிரிவில் இலக்கம் 267 பொல்தும்பே கிராமஉத்தியோகத்தர் பிரிவில் பொல்தும்பே அல்லது தேவாலேகம கிராமத்தில் அமைந்துள்ள 0.9571 ஹெக்டேயார்ஸ் பரப்பளவு கொண்டகீழ் குறிப்பிடப்படும் எல்லைகளைக் கொண்ட பிரதேசம்.*

**(துண்டு இலக்கம்** *22)*

*வடக்கு : காணித் துண்டு இலக்கம் 10 மற்றும் 6;*
*கிழக்கு : காணித் துண்டு இலக்கம் 10 மற்றும் 6;*
*தெற்கு : காணித் துண்டு இலக்கம் 10 மற்றும் 6;*
*மேற்கு : காணித் துண்டு இலக்கம் 10, 7 மற்றும் 3.*

*09-502*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*